**செ.வெ.எண்:07** **நாள்: 04.04.2019**

**கரூர் மாவட்டம்**

**வாக்குப்பதிவு நாளன்று தேர்தல் பணியாற்றவுள்ள வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான பணிஒதுக்கீடு இரண்டாவது முறையாக கணினி மூலம் குலுக்கல் - தேர்தல் நடத்தும் அலுவலரும் மாவட்ட ஆட்சித்தலைவருமான திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் தேர்தல் பொது மற்றும் செலவினப்பார்வையாளர்கள் முன்னிலையில் நடத்தினார்**

அதன் விபரம் வருமாறு:

நடைபெறவுள்ள மக்களவைபொதுத்தேர்தலில் கரூர் மாவட்டத்தில் உள்ள 1,031 வாக்குச்சாவடி மையங்களும், 6 துணை வாக்குச்சாவடி மையங்களும் என மொத்தம் 1,037 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வாக்குச்சாவடி மையத்திலும், ஒரு வாக்குசாவடி தலைமை அலுவலர் மற்றும் வாக்குச்சாவடி அலுவலர்கள் மூன்று நபர்கள் நியமிக்கப்படுவார்கள். 1,400க்குமேல் வாக்காளர்கள் உள்ள வாக்குச்சாவடி மையங்களில கூடுதலாக ஒரு வாக்குச்சாவடி அலுவலர் மற்றும் இதர அலுவலர்கள் நியமிக்கப்படுவார்கள். அதனடிப்படையில் மொத்தம் உள்ள 1,037 வாக்குச்சாவடி மையங்களிலும் பணிபுரிய 5,028 நபர்களுக்கு பணி ஒதுக்கீடுசெய்யப்படுவதற்கான முதற்கட்ட கணினி முறையிலான குலுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள தேர்தல் பிரிவில் 21.03.2019 அன்று தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களால் நடத்ததப்பட்டது.

அதனை தொடர்ந்து தேர்தல் நடத்தும் அலுவலரும் மாவட்ட ஆட்சித்தலைவருமான திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் 23-கரூர் மக்களவைத்தொகுதிக்கான தேர்தல் பொதுப்பார்வையாளர் திரு.பிரசாந்த் குமார்.இஆப., (PRASHANT KUMAR.IAS) அவர்கள், தேர்தல் செலவினப் பார்வையாளர் திரு.மனோஜ்குமார்.இ.வ.ப, (MANOJKUMAR.IRS), மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முனைவர் டி.கே.இராஜசேகரன்.இகாப., ஆகியோர் முன்னிலையில் இரண்டாவது கட்டமாக கணினிமுறையில் குலுக்கலை நடத்தினார். அதனடிப்படையில் 5,028 நபர்களுக்கும் இன்று முதல் அவர்கள் எந்தெந்த சடட்மன்ற தொகுதியில் பணிபுரிய வேண்டும் என்பதறாக ஆணை வழங்கப்படவுள்ளது.

24.03.2019 ஞாயிற்றுக்கிழமையன்று பணி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு அந்ததந்த சட்டமன்றத்தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் சம்மந்தப்பட்ட மண்டல அலுவலர்களின் மூலம் முதற்கட்ட பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டது. தற்போது நடைபெற்ற இரண்டாம் கட்ட குலுக்கல் மூலம் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு தான் வசிக்கும் சட்டமன்ற தொகுதியை தவிர்த்து பிற சட்டமன்ற தொகுதியில் பணிபுரிவதற்கான ஆணை வழங்கப்படவுள்ளது. அவர்களுக்கு வருகிற 07.04.2019 அன்று இரண்டாம் கட்ட பயிற்சி வழங்கப்பட உள்ளது. மேலும் 13.04.2019 அன்று வாக்குச்சாவடி நிலையிலான 1 மற்றும் 2ஆம் அலுவலர்களுக்கு மூன்றாம் கட்ட பயிற்சி வழங்கப்பட உள்ளது. மேலும் மூன்றாம் கட்டமாக நடைபெற உள்ள கணினி முறையிலான குலுக்கல் மூலம் வாக்குபதிவிற்கு ஒரு நாளைக்கு முன்னதாக எந்த வாக்குச்சாடியில் சமந்தப்பட்ட அலுவலர் பணிபுரியவேண்டும் என்ற விபரம் தயார்செய்யப்பட்டு உத்தரவு வழங்கப்படும்.

அதனடிப்படையில் கரூர் சட்டமன்றத்தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு வெண்ணமலை சேரன் மெட்ரிக்மேல்நிலைப்பள்ளியிலும், அரவக்குறிச்சி சட்டமன்றத்தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு வள்ளுவர் மேலாண்மைக் கல்லூரியிலும், கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத்தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு புலியூர் இராணி மெய்யம்மை மேல்நிலைப்பள்ளியிலும், குளித்தலை சட்டமன்றத்தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு குளித்தலை அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியிலும் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்புகள் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின்போது மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) திருமதி.செல்வசுரபி, உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் திரு.சரவணமூர்த்தி (கரூர்) திரு.லியாகத் (குளித்தலை) திருமதி.மல்லிகா (கிஷ்ணராயபுரம்) திருமதி.மீனாட்சி (அரவக்குறிச்சி) தேர்தல் பிரிவு வட்டாட்சியர் திரு.சிவக்குமார் உள்ளிட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.**